# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு


## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### இலங்கை மத்திய வங்கி

2024 சனவரி
தொகுதி 06 வெளியீடு 01


## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





2024 சனவரியில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 971 மில்லியனிற்கு 0.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவு வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2024 சனவரியில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,512 மில்லியனிற்கு 6.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)




2024 சனவரியில் ஏற்றுமதி வருவாய்கள் 0.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினை பதிவுசெய்தன. இருப்பினும், இம்மாத காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினம் 6.2 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.


### வர்த்தக மீதி (ஐ.அ.டொ. மில்)




வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 445 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 541 மில்லியனிற்கு விரிவடைந்தது.


## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் (2024 சனவரி)

### ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்) / இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் - சனவரி




### ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - சனவரி





கைத்தொழில் மற்றும் கனிமப்பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 2024 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் சிறியளவிலான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.


2024 சனவரி காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 4.4 சதவீதத்தினால் மேம்பட்டவேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் சனவரி





### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்





சிறு வேளாண்மை உற்பத்திகள், தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் தேயிலை ஏற்றுமதிகள் என்பவற்றிலிருந்தான உயர்ந்தளவிலான வருவாய்களினால் உந்தப்பட்டு, 2024 சனவரி காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தன. இருப்பினும், இம்மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்கள், இறப்பர் மற்றும் காய்கறிகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறைவடைந்தன.

# கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றும் சனவரி





### நீர்க்கல மற்றும் வானூர்தி மற்றும் எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்





ஆடைகளின் குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சியினால் பங்களிக்கப்பட்டு, 2024 சனவரி காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. மேலும், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், பெற்றோலிய உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

# இறக்குமதிச் செயலாற்றம்

### இறக்குமதிச் செயலாற்றம் - சனவரி





### இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் - சனவரி





இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறைவொன்றிற்கு மத்தியில் நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீது உறப்பட்ட உயர்ந்தளவிலான செலவினத்தின் காரணமாக 2024 சனவரி காலப்பகுதியில் வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது. அதேவேளை, 2024 சனவரியில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 7.7 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

# நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்


## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்





## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றும் சனவரி





## சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் அதிகரித்த இறக்குமதிகளின் காரணமாக 2024 சனவரி காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதிகரித்தது. எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள், காய்கறிகள், மற்றும் தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் என்பன மீதான செலவினம் அதிகரித்தவேளையில் சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் குறைவடைந்தது.

# இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்





## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செயலாற்றம் - சனவரி




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்த சராசரிகள்)





*2023 பெப்புருவரி மற்றும் செத்தெம்பர் ஆகிய மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


எரிபொருள் குறிப்பாக, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதிகளின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக 2024 சனவரி காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. மேலும், வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள், மற்றும் பதப்படுத்தப்படாத புகையிலை என்பவற்றின் இறக்குமதிகளில் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், இம்மாத காலப்பகுதியில் அடிப்படை உலோகங்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் கோதுமை மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் - சனவரி




கட்டடவாக்கப் பொருட்கள், பொறி மற்றும் சாதனங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய சகல முக்கிய முதலீட்டுப் பொருள் வகைகளிலும் ஏற்பட்ட உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2024 சனவரி காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு (அ)

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 சன-திசெ | 2023 சன-திசெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன | 2024 சன | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **2,568.0** | **2,566.5** | **-0.1** | **191.0** | **195.5** | **2.4** |
| இதில் | தேயிலை | 1,258.8 | 1,309.9 | 4.1 | 99.6 | 102.2 | 2.6 |
| | தெங்கு | 400.3 | 336.8 | -15.9 | 22.0 | 24.8 | 13.0 |
| | வாசனைத்திரவியங்கள் | 368.7 | 392.9 | 6.5 | 34.1 | 27.9 | -18.2 |
| | கடலுணவு | 269.0 | 262.2 | -2.5 | 20.9 | 23.0 | 9.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **10,465.3** | **9,277.7** | **-11.3** | **781.3** | **771.5** | **-1.3** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 5,952.0 | 4,878.9 | -18.0 | 424.4 | 381.2 | -10.2 |
| | இறப்பர் உற்பத்திகள் | 977.0 | 902.2 | -7.7 | 72.7 | 80.0 | 10.2 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 568.0 | 539.4 | -5.0 | 46.4 | 85.9 | 85.0 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 519.5 | 539.3 | 3.8 | 34.7 | 44.0 | 26.8 |
| | பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 580.9 | 598.2 | 3.0 | 50.8 | 40.0 | -21.3 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 450.6 | 500.0 | 11.0 | 54.1 | 48.2 | -11.0 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 85.8 | 71.2 | -17.0 | 5.2 | 4.3 | -18.8 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **73.2** | **66.4** | **-9.2** | **5.9** | **3.8** | **-36.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **13,106.4** | **11,910.7** | **-9.1** | **978.2** | **970.7** | **-0.8** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 சன-திசெ | 2023 சன-திசெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன | 2024 சன | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **2,813.0** | **3,043.9** | **8.2** | **218.5** | **281.3** | **28.8** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 1,607.9 | 1,693.0 | 5.3 | 118.3 | 156.6 | 32.3 |
| இதில் | காய்கறிகள் (ஆ) | 318.4 | 358.6 | 12.6 | 24.1 | 33.8 | 40.1 |
| | அரிசி | 292.5 | 17.1 | -94.2 | 2.1 | 19.0 | 796.2 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 1,205.1 | 1,350.9 | 12.1 | 100.2 | 124.8 | 24.6 |
| இதில் | மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 533.4 | 667.0 | 25.0 | 51.0 | 56.2 | 10.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **12,438.8** | **11,006.6** | **-11.5** | **1,005.9** | **980.5** | **-2.5** |
| இதில் | எரிபொருள் | 4,896.8 | 4,702.6 | -4.0 | 516.5 | 417.5 | -19.2 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 3,065.2 | 2,371.2 | -22.6 | 217.5 | 224.5 | 3.2 |
| | வளமாக்கிகள் | 275.9 | 235.0 | -14.8 | 9.6 | 9.0 | -5.9 |
| | கோதுமை மற்றும் சோளம் | 303.1 | 338.2 | 11.6 | 5.6 | 16.4 | 194.1 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **3,039.2** | **2,760.6** | **-9.2** | **199.0** | **250.0** | **25.6** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 1,969.0 | 1,867.6 | -5.1 | 132.6 | 166.0 | 25.1 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **18,291.0** | **16,811.1** | **-8.1** | **1,423.4** | **1,511.8** | **6.2** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2022 சன-திசெ | 2023 சன-திசெ | 2023 சன | 2024 சன |
|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -5,184.6 | -4,900.4 | -445.2 | -541.1 |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (இ)

| விடயம் | | 2022 சன-திசெ | 2023 சன-திசெ | ஆ-ஆ. மாற்றம் (%) | 2023 சன | 2024 சன | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 152.0 | 138.1 | -9.1 | 136.1 | 135.1 | -0.8 |
| | அளவுச் சுட்டெண் | 163.0 | 166.1 | 1.9 | 192.1 | 200.5 | 4.4 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 93.3 | 83.2 | -10.8 | 70.9 | 67.4 | -4.9 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 136.4 | 125.4 | -8.1 | 127.4 | 135.3 | 6.2 |
| | அளவுச் சுட்டெண் | 126.0 | 129.8 | 3.0 | 157.4 | 169.5 | 7.7 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 108.3 | 96.6 | -10.8 | 80.9 | 79.8 | -1.4 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 86.1 | 86.1 | -0.1 | 87.6 | 84.4 | -3.6 |

(அ) தற்காலிகமானது

(ஆ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவற்றினை உள்ளடக்கியுள்ளது

(இ) ஐ.அ.டொ. நியதிகளில்